## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.63/2022 |
| Prosecution Witness | : | அ.சா.5 |
| Name | : | ஹரிசந்திர மகாராஜா (கூட்டுறவு சார்பதிவாளர்) |
| Father's / Husband Name | : | கருப்பையா |
| Address | : | முசிறி |
| Age | : | 39/2025 |

**தேதி : 23.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் முசிறி வட்டாரத்தில் கூட்டுறவு சார்பதிவாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2013-2014 நிதியாண்டிற்கான இறுதி தனிக்கை அறிக்கை செய்யும்பொருட்டு 20.03.2015 அன்று முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர், திருச்சிராப்பள்ளி பணிபுரிந்த போது சிறப்பு பணி அடிப்படையில் பெரம்பலூர் சரகத்திற்கு உட்பட்ட TRD 931நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு சென்றேன். மேற்படி சங்கத்திற்கு சென்று தணிக்கை பணி மேற்கொள்ள தேவையான ஆவணங்களான ரொக்க புத்தகம், செலவு சீட்டு, வங்கி புத்தகம், ஒன்றிய பால் கணக்கு இனங்கள், அனாமத்து வரவேண்டிய இனங்கள் பதிவேடு, இருப்பு பதிவேடு, தளவாடபதிவேடு, குறைநிவர்த்தி பதிவேடு மற்றும் பொதுபேரேடு ஆகிய பதிவேடுகள் சங்க நிர்வாகத்திடம் கோரினேன். சங்கத்தின் செயலாளர் வழங்கிய பதிவேடுகளை வைத்து தணிக்கை பணியினை மேற்கொண்டேன். தணிக்கை பணி மேற்கொள்ளும்போது ஒருசில பதிவேடுகள் சங்கத்தில்

காணப்படவில்லை. அப்பதிவேடுகள் காணப்படாததை குறித்து தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

நான் தணிக்கை பணி மேற்கொள்ளும்போது கண்டறியப்பட்ட குறைபாடுகளான 1. உறுப்பினர்களுக்கு பால் பண பட்டுவாடா, 2. கையிருப்பு விடுதல், 3. பதிவேடின்றி வழங்கப்பட்ட ஊக்கதொகை, 4. பற்றுசீட்டின்றி உள்ள செலவினங்கள், 5. நலநிதி உறுப்பினர் பங்கு, 6. தீவனம் இருப்பு குறைவு,. மற்றும் சினை ஊசி இருப்பு குறைவு ஆகிய இனங்களில் ரூ.48,35,055.10/- அளவிற்கு முறைகேடு நடந்து சங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக இறுதி தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். மேலும் எனது தனி அறிக்கையிலும், மேற்படி முறைகேடு விவரங்களை விவரமாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி இறுதி தணிக்கை அறிக்கை மற்றும் எனது தனி அறிக்கை ஆகியவற்றை 18.05.2015ம் தேதி எனது உதவி இயக்குநர் பெரம்பலூர் சரகம் வழியாக மண்டல துணை இயக்குநர் பால் கூட்டுறவு தணிக்கை துறை, திருச்சிராப்பள்ளி அலுவலகத்தில் சமர்ப்பித்தேன். **18.05.2015 தேதியிட்ட தனி அறிக்கை படிவம் அ.சா.ஆ-37 ஆகவும், 18.05.2015 தேதியிட்ட தனி அறிக்கை அ.சா.ஆ-38 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அ.சா.ஆ.32 இறுதி தணிக்கை அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். முறைகேடுகள் குறித்து வணிக குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து ஆகஸ்ட் மாதம் 2020ல் என்னை சாட்சியாக விசாரித்தார்கள்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.